18.06.2026

அ.வ.எண். 114/2024

வா.சா.1 – திருமதி. மரகதம் க/பெ. அப்பாசாமி

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 18.06.2026 is accordance with the provision of Act X of 3331

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாய்க்கால் நீர் வரும் போது அதை பிரதிவாதி அழித்துவிடுகிறார், அழிக்கக்கூடாது என வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வண்டித்தடம், பைப் லைன், வாய்க்கால் தண்ணீர் பிரச்சனை சம்மந்தமாக பரிகாரம் கோரியுள்ளேன். நான் வழக்கில் மேற்கண்டவாறு பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. எந்த பத்திரத்தின் அடிப்படையில் தாவாவில் சொத்து விவரம் குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. என் தம்பிக்கு தான் தெரியும்.

2. என் தம்பி அகத்தீஸ்வரன் இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.113/2024 வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அவரும் இதே பரிகாரம் கோரியுள்ளார் என்றால் சரிதான். எனக்கு பூர்வீக சொத்து எந்த வருடம் வந்தது என்றால் நான் மறந்துவிட்டேன். வா.சா-ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தின்படி, சுப்பைய கவுண்டர் மகன் ரங்கசாமி, ரங்கசாமி கவுண்டர் மனைவி சங்கரம்மாள், ரங்கசாமி கவுண்டர் மக்கள் மாரப்ப கவுண்டர், வெங்கடாசல கவுண்டர் ஆகியோர் பாகம் செய்து கொண்டதாக வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

3. மேற்படி மாரப்ப கவுண்டரின் மகன் சிதம்பரசாமி, என்றும், சிதம்பரசாமியின் மனைவி பிரதிவாதி சிவகாமி என்றால் சரிதான். அதில் வெங்கடாசல கவுண்டர் என்பவர் என் தகப்பனார் ஆவார். வெங்கடாசல கவுண்டர் வந்த பூமியை நானும், என் சகோதரர் மற்றும் இந்த வழக்கின் மற்ற வாதிகள் பாகம் பிரித்து கொள்ளவில்லை என்றால் ஆமாம். இன்றுவரை நாங்கள் ஒன்றாக தான் அனுபவம் செய்து வருகிறோம் என்றால் ஆமாம். இந்நிலையில் நான் தனியாக ஒரு வழக்கும், என் தம்பி அகத்தீஸ்வரன் தனியாக ஒரு வழக்கும், தாக்கல் செய்துள்ளது

ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. என் தம்பி அகத்தீஸ்வரன் இந்த வழக்கில் தரப்பினர் அல்ல என்றால் சரிதான். பொதுவாக உள்ள சொத்தில் என் தம்பி அகத்தீஸ்வரனை தரப்பினராக சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்காததால் தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

4. அ.வ.எண்.114/2024 இந்த வழக்கு சொத்து விவரமும், அ.வ.எண்.113/2024 வழக்கு சொத்து விவரமும், ஒன்று என்றால் சரிதான். மேற்படி இரு வழக்கின் பரிகாரம் ஒன்று என்றால் சரிதான். ஒரே பரிகாரத்திற்கு இரு வழக்குகள் தாக்கல் செய்துள்ளது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தின் வருவாய் ஆவணங்களான பட்டா, சிட்டா, அ-பதிவேடு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். நான் அவ்வாறு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

5. வா.சா.ஆ.2 பரிவர்த்தனை பத்திரம், வழக்கின் வாதிகள் மற்றும் அ.வ.எண்.113/2024 வழக்கின் வாதி என் தம்பி அகத்தீஸ்வரன் மற்றும் ஒரு ராமசாமி என்பவர்களுக்குள் ஏற்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பரிவர்த்தனை பத்திரத்தில், சிதம்பரசாமி தரப்பினராகவோ அல்லது சாட்சியாகவோ கையொப்பம் செய்யவில்லை என்றால் கையொப்பம் செய்துள்ளார். அவ்வாறு கையொப்பம் செய்யவில்லை என்றும், வா.சா.ஆ.2 பரிவர்த்தனை பத்திரத்திற்கும், சிதம்பரசாமிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

6. வா.சா.ஆ.2 ஆவணத்தில் பிழை உள்ளதாக வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சாஆ.2 பரிவர்த்தனை ஆவணம் குறித்து பிழை திருத்தல் பத்திரம் ஏற்படுத்தி கொள்ளவில்லை என்றால் பிழை இல்லை. வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொன்னதற்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் பிழை உள்ளதாக சொல்லியுள்ள நிலையில், அதன் அடிப்படையில் நான் பரிகாரம் கோரியுள்ளது நிலைக்கத்தக்கது அல்ல என்றால்

சரியல்ல.

7. வா.சா.ஆ.3 பரிவர்த்தனை பத்திரம், சிதம்பர சாமி மற்றும் ராமசாமிக்கு இடையே ஏற்பட்டது என்றால் அகத்தீஸ்வரன், சிதம்பரசாமி மற்றும் ராமசாமிக்கு இடையே ஏற்பட்டது. வா.சா.ஆ.3 பரிவர்த்தனை பத்திரத்தில், அகத்தீஸ்வரன் பெயர் இல்லை என்றால் உள்ளது. வா.சா.ஆ.3 பரிவர்த்தனை பத்திரத்தில், அகத்தீஸ்வரன் தரப்பினராகவோ அல்லது சாட்சியாகவோ இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 பரிவர்த்தனை பத்திரத்தில் எந்தெந்த சொத்துக்களை பரிவர்த்தனை செய்து கொண்டனர் என்றால் சொத்து விவரம் தெரியாது.

8. அ.வ.எண்.114/2024 இந்த வழக்கு விவரங்கள் மற்றும் ஆவணங்கள் குறித்து வழக்கறிஞரிடம் யார் சொன்னார்கள் என் தம்பி சொன்னார். எனவே, சொத்து குறித்து முழு விவரமும் என் தம்பி அகத்தீஸ்வரனுக்கு தான் தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்களில், பொது ஷராவில் என்ன விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. என் தம்பி அகத்தீஸ்வரனுக்கு தான் தெரியும். பொது ஷராவில் உள்ள பாதி சொத்து விவரத்தை தான் மேற்படி இரு வழக்கிலும் சொத்து விவரமாக சொல்லியுள்ளேன் என்றால் முழு சொத்து விவரத்தையும் சொல்லியுள்ளேன்.

9. வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்களில், பொது ஷராவில் சொல்லாத க.ச.எண்களை க.ச.எண்.597/2B, 597/2C1, 578/3C ஆகிய காலைகளில் உள்ள பாத்தியங்கள் சகிதம் என பத்திரத்தில் இல்லாத காலைகளையும் வழக்கு சொத்து விவரத்தில் சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு இல்லை. இந்த வழக்கிற்கு சாதகமாக நான் மேற்படி சர்வே எண்களை சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக, பிரதிவாதியின் கணவர் சிதம்பரசாமி இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

10. சிதம்பரசாமிக்கு அவரது மனைவி சிவகாமி மற்றும் இரு மகள்கள் உள்ளனர் என்றால் சரிதான். சிதம்பரசாமியின் பங்கு பாகம் பிரிக்காமல் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. சிதம்பரசாமியின் இரு மகள்களை இந்த வழக்கில்

தரப்பினராக சேர்க்காமல், மேற்படி வழக்கு தாக்கல் செய்துள்ளதால், உரிய தரப்பினரை சேர்க்காததால்  இந்த வழக்கு செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில், பிரதிவாதி நெடுஞ்சாலைத்துறை , பொதுப்பணித்துறை மற்றும் வருவாய்துறை இடங்களை ஆக்கிரமித்து பைப் லைன் அமைத்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றும், அனுமதி வாங்காமல் பைப் லைன் அமைத்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.  பிரதிவாதி அனுமதி வாங்கவில்லை எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். நான் இந்த வழக்கில் நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித்துறை மற்றும் வருவாய்துறை ஆகியோரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

11. பிரதிவாதி அனுமதி இல்லாமல் பைப் லைன் அமைத்துள்ளார் என நெடுஞ்சாலைத்துறை , பொதுப்பணித்துறை மற்றும் வருவாய்துறை ஆகியோர்களிடம் புகார் கொடுத்தேனா என்றால் ஆமாம். மேற்படி புகாரின் நகலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் தம்பிடை கேட்க வேண்டும். நான் சொல்வது போல் புகார் கொடுத்ததாக வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன்.  நான் தனிப்பட்ட முறையில் புகார் கொடுக்கவில்லை என்றும், அதற்கான நகலை தாக்கல் செய்யவில்லைஎன்றால் தாக்கல் செய்துள்ளேன்.

12. எனக்கு 1981 ல்திருமணம் நடைபெற்றது. நான் அப்போதிலிருந்து திருப்பூர், மண்ணறையில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்து உள்ள ஊருக்கு என் அம்மா மற்றும் தம்பியை பார்க்க வருவேன் என்றால் சொத்தை அனுபவம் செய்து வருகிறேன். நான் சொத்தை அனுபவம் செய்து வந்தால் அதற்கான பட்டா, சிட்டா மற்றும் அடங்கல் தாக்கல் செய்திருப்பேன் என்றும், அதற்கான விவரங்களை சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்யவில்லை என்றால் அனைவரும் ஒன்றாக அனுபவம் செய்து வருகிறோம்.

13. PAP வாய்க்காலை பிரதிவாதி எந்த தேதியில் அடைத்தார்

என்றால் தேதி தெரியாது.என்னுடைய வழக்கில் எந்த தேதியில் PAP வாய்க்காலை அடைத்தார் என சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். எந்தெந்த காலைகளில் வண்டித்தடம் செல்கிறது என்றால் காலை எண் தெரியாது. பிரதிவாதி எந்த தேதியில் வண்டித்தடத்தை அழித்தார்கள் என சொல்லவில்லை என்றால் வண்டித்தடத்தை அழிக்கவில்லை, பாகப்பரிவர்த்தனையின் போது அகத்தீஸ்வரன் பங்கில் வண்டித்தடம் மற்றும் பைப் லைன் அமைத்து கொள்ளலாம் என பேசியுள்ளனர். ஆனால் என்னுடைய தகப்பனார் வெங்கடாசலம் பூமியில் வண்டித்தடம் மற்றும் பைப் லைன் அமைத்துள்ளனர். மேற்படி சங்கதியை வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தை சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். தற்போது தான் வழககிற்காக புதிதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

14. PAP வாய்க்காலை தவறாக பயன்படுத்தினால் அதற்குள்ள சங்கத்திற்கு சென்று முறையீடு செய்ய வேண்டும் என்றால் நான் முறையீடு செய்துள்ளேன். அங்குள்ள சங்கத்தினர் அழைத்து விசாரித்தனர். மேற்படி சங்கத்தின் தலைவர் கோவிந்தராஜ் ஆவார். மேற்படி கோவிந்தராஜ் பேசியதில் இந்த முறை எங்களுக்கு தண்ணீர் வந்தது என்றால் சரிதான். PAP வாய்க்காலை பொறுத்தவரை, அதற்குள்ள சங்கத்திற்கு சென்று தான் முறையீடு செய்ய வேண்டும் என்றும், சிவில் நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்றால் ஒருதலைபட்சமாக பேசியதால் நாங்கள் சிவில் நீதிமன்றத்திற்கு வந்துள்ளோம். பைசல் பேசி எங்கள் பூமிக்கு தற்போது தண்ணீர் பெற்றதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் வாய்க்கால் தண்ணீர் பாய்ந்துவிட்டது, இனிமேல் வாய்க்கால் தண்ணீரை அழிக்கக்கூடாது.

15. வண்டித்தடத்தை அடைப்பதாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். வெங்கடாசலம் பூமியில் உள்ள தடத்தை எடுக்க வேண்டும். நான் மேற்கண்டவாறு வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். PAP வாய்க்கால் மற்றும் வண்டித்தடத்தை அடைப்பதாக நீதிமன்ற ஆணையரை அழைத்து சென்றேனா என்றால் ஆமாம். நான் அவ்வாறு மனு தாக்கல் செய்யவில்லை என்றும், நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை

பார்வையிடவில்லை என்றால் சரியல்ல.

16. கேள்வி புரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஒரு சில கேள்விகள் புரியாமல் இருக்கலாம். என்னுடைய வழக்குரை மற்றும் பரிகாரத்திற்கு இடையே முரண்பாடு உள்ளது என்றால் சரியல்ல. வழக்குரை மற்றும் சொத்து விவரத்தில் PAP வாய்க்கால் எந்த காலைக்கு செல்கிறது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன்.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur